செ.வெ.எண்: 41/ஆகஸ்ட் நாள்: 21.08.2017

## இராமநாதபுரம் மாவட்டம்

## மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து, பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 5.5 இலட்சத்திற்கான காசோலைகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (21.08.2017) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, அதன்பின்பு மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து பல்வேறு விபத்துகளில் உயிரிழந்தவர்களின் வாரிசுதாரர்களுக்கு ரூபாய் 5.5 இலட்சத்திற்கான காசோலைகளை வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வருகை தந்த பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை பெற்ற மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள், அம்மனுக்களை ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை மேற்கொண்டு தீர்வு காண வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களை அறிவுறுத்தினார்.

தொடர்ந்து, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் பொது நிவாரண நிதியிலிருந்து, மின்சாரம் தாக்கி உயிரிழந்த முதுகுளத்தூர் வட்டம், கோடாரேந்தல் கிராமத்தைச் சேர்ந்த திரு.ஞானப்பிரகாஷம் என்பவரின் மனைவிக்கு ரூ.3,00,000/- காசோலையினையும், சாலை விபத்தில் இறந்த பரமக்குடியைச் சேர்ந்த திரு.கண்ணன் மற்றும் கமுதி வட்டம், சம்பக்குளம் கிராமத்தைச் சேர்ந்த திரு.கருப்பையா ஆகியோரின் வாரிசுதாரர்களுக்கு தலா ரூ.1,00,000/- என மொத்தம் ரூ.2 இலட்சத்திற்கான காசோலையினையும் , கிணற்றில் தூர்வாறும் போது மூச்சுத்திணறி உயிரிழந்த இராமநாதபுரம் வட்டம், காரான் கிராமத்தைச் சேர்ந்த திரு.கோவிந்தராஜ் என்பவரின் மனைவிக்கு ரூ.50,000/-க்கான காசோலையினையும் ஆக மொத்தம் 4 பயனாளிகளுக்கு ரூபாய் 5.5 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

இக்கூட்டத்தில் சமூக பாதுகாப்பு திட்ட தனித்துணை ஆட்சியர் திரு.என்.எஸ்.பாலசுப்பிரமணியன், செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு.கோ.அண்ணாதுரை உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**